**துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்**

# விலைமனுக்கோரல் (IFB)

## புத்தளம், லக்விஜய அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி போக்குவரத்து செய்யும், நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலுக்கு சென்று வருவதற்கு படகு சேவை வழங்குவதற்கான விலைமனுக்கோரல் - 2022/2024 காலத்திற்கான

## தேசிய விலைமனுக்கோரல் போட்டி (NCB)

## ஒப்பந்த இலக்கம் : CSC/BT/2023/24

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் வழங்கற் சபை தலைவரினால் (DPC) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் புத்தளம், லக்விஜய அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி போக்குவரத்து செய்யும், நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலுக்கு சென்று வருவதற்கு படகு சேவை வழங்குவதற்கான முன் அனுபவம் மிக்க மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

1. இந்த சேவையை பெற்றக்கொள்வது **2023 செப்டெம்பர் நடுப்பகுதி முதல் 2024 மே** நடுப்பகுதி வரை மாத்திரமே.
2. பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
3. படகில் ஒரே தடவையில் (குறைந்தது) 10 பேர் வரை பாதுகாப்பாக பயணிக்கக்கூடியவாறு வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒரே நேரத்தில் பயணிகள் தவிர்த்து 500-1000 கி.கி வரை பொருட்கள் ஏற்றிச் செல்லக்கூடியதாய் இருத்தல் வேண்டும் (ஏற்றிச் செல்லக்கூடிய நிறைக்கான சான்றிதழை முன்வைக்க வேண்டும்.)
5. அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பு ஆடை (Life Jacket) மற்றும் நீர்புகா மேற்சட்டை (Rain Coat) வழங்க வேண்டும்.
6. படகில் தங்குமிட பகுதியின் மேற்புறம் வெயில் / கடல் நீரிலிருந்து (Sea Spray) பாதுகாப்பு வேலியை கொண்டிருத்தல் வேண்டும்.
7. தெரிவு செய்யப்படும் படகு மற்றும் படகு ஓட்டுனருக்கு இலங்கை கடற்படையில் அனுமதி பெறக்கூடியதாக இருத்தல்.
8. படகு ஓட்டுனர் செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
9. பயணிகள் மற்றும் ஊழியர் குழாம் மற்றும் பொருட்களுக்கு செல்லுபடியாகும் பயணிகள் காப்புறுதி சான்றிதழை கொண்டிருத்தல்.
10. படகு ஓட்டுனர் மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் பொலிஸ் நன்னடத்தை சான்றிதழை கொண்டிருத்தல். வேண்டும்.
11. நிலக்கரி இறக்கப்படும் காலப்பகுதியில் எந்தவொரு நாளிலும் பகல், இரவு சேவையை வழங்கக்கூடியதாக இருத்தல் மற்றும் தேவைப்படும் போது கப்பலுக்கு அருகில் 4 படகுகளை நிறுத்தி வைக்கக்கூடியதாக இருத்தல்.
12. படகுகளுக்கு உரித்தான சர்வதேச தரப்படுத்தல் சங்க மாநாட்டில் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடற்பயணத்திற்கான சான்றிதழ் அல்லது தரப்படுத்தல் சங்கத்தின் சான்றிதழ் முன்வைக்கவேண்டும்.
13. சாதாரண கடல் தன்மையின் கீழ் மணித்தியாலத்திற்கு 12 மைல்கள் தூரத்திற்கு குறையாத வேகத்தில் பாதுகாப்பாக செலுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
14. VHF, Compass, Flash Light மற்றும் SOLAS இனால் பரிந்துரைக்கப்பட்ட முதலுதவி வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
15. லக்விஜ அனல்மின் நிலையத்தின் பரப்பில் 4-5 மீட்டர் அளவிற்கு ஏற்ற படகாக இருத்தல் வேண்டும்.

வழங்கப்படும் படகுகளில் பயணிகள் மற்றும் பொருட்களை பாதுகாப்பாக ஏற்றக்கூடிய லக்விஜய அனுமின் நிலையம் அல்லது நுரைச்சோலையில் காணப்படும் கடற்படை முகாம்களுக்கு அருகில் செய்யக்கூடியதாக இருத்தல், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது முற்றுமுழுவதும் மனுதாரர்களையே சாரும்.

ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் கப்பல்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் மற்றும் குறித்த திணைக்களத்தில் **dantha@cscl.lk** அல்லது **071 0215702** எனும் இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் மனு ஆவணங்களை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தினமும் **மு.ப.9.00 முதல் பி.ப.03.00** மணிவரை வேலைநாட்களில் காரியாலய நேரத்தில் பரிசீலனை செய்ய முடியும்.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தினமும் அலுவலக நேரத்தில் **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.03.00 மணி** வரையான காலப்பகுதியினுள் **ரூ.10,000/- (+15%) (வட்வரி உள்ளடங்களான) மீளச்செலுத்தப்படாத** கட்டணத்தை செலுத்தி இந்த கூட்டுத்தாபனத்தில் மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

உரிய முறையில் முழுமையாக்கப்பட்ட விண்ணப்பங்கள் தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் **"படகுச் சேவைகளுக்கான விலைமனுகோரல் 2023/24"** எனக்குறிப்பிட்டு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் (குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன் கிடைக்கப்பெறுமாறு) அல்லது அந்த விலாசத்தில் கூட்டுத்தாபன காரியாலயத்தில் அதற்காக இடப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியில் **2023.08.03** திகதிக்கு முன் இட முடியும்.

**2023.08.03 ஆம் திகதி 1500 மணிக்கு (இலங்கை நேரப்படி)** மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். இந்த மனுக்களை எந்த ஒரு நேரத்திலும் நிராகரிக்கும் உரிமை மற்றும் நீட்டிக்கும் உரிமை வழங்கற்குழுவின் வசம் இருப்பதுடன் நிராகரிப்பதற்கான காரணத்தை வழங்கற்குழு முன்வைக்கத்தேவையில்லை. நேரம் தாழ்த்திக்கிடைக்கும் மனுக்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

இவ்விலைமனுக்கோரலின் அடிப்படையில் **2023 செப்டெம்பர் மாதம் நடுபகுதி முதல் 2024 மே மாதம் நடுபகுதி** வரை செல்லுபடியாகும் **(நிலக்கரி இறக்கும் காலம் + / - 02 கிழமை).** அதேபோல் மீண்டும் இரு முறை தெரிவு செய்யும் நிறுவனங்களுக்காக ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பது (ஒப்பந்தத்தின் அடிப்படையில்) வரையருக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் விருப்பத்தின் படியாகும்.


**தலைவர்**

**கூட்டுறவு வழங்கல் குழு**

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்,**

**இல - 27, MICH கட்டிடம், சேர் ராஸீக் பரீட் மாவத்தை,**

**கொழும்பு 00100.**

**தொடர்புகளுக்கு - (011) 2328772/3, (011) 2423214, (011) 2497800**